ConnectABILITY
A project of Community Living Toronto



# சேர்ந்தே கற்போம் படிப்படியாக செல்லும் வழி

டொரான்டோ நகரம்/ ஆரம்ப குழந்தைப்பருவ சேவைகள் குழு: டொரான்டோ சமூக வாழ்க்கை/ சர்ரே பிளேஸ் மையம்

***குறிப்புப் பக்கம்***

# ஷூ நாடாவைக் கட்டும் செயல் முறை வரிசை

புதிய திறமைகளை கற்றுக்கொள்ளும் போது, பெரும்பாலான குழந்தைகளுக்கு உதவி தேவைப்படுகிறது. அந்த வழி முறைகளை சிறிது சிறிதாகப் பிரிப்பதனால், குழந்தை ஒவ்வொரு வழி முறையாக கற்க முடியும். ஒரு குழந்தையைப் பொருத்தே அந்த வழிமுறைகளைப் எத்தனை சிறு பாகங்களாக பிரிப்பது என்பது அமையும்.

உங்களுடைய குழந்தைக்கு ஒரு தொடர் படக்காட்சியை அளிக்க விரும்பலாம். இது அடிப்படையாக தொடர் சித்திரங்கள் மூலமாக ஒரு பணியை முடிப்பதற்கு எடுக்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதாகும். நீங்கள் நிஜமான புகைப்படங்களையோ, வரி வடிவங்களையோ, அல்லது படக் குறிப்புகளையோ பயன்படுத்தலாம். படக்காட்சித் தொடரைப் பயன்படுத்தும்போது, உங்களுடைய குழந்தையின் கண் பார்வையில் படும்படியாக அமையுங்கள். அந்தப் படத்தைக் குறிப்பிட்டு அதன் வழி முறைகளை உரக்கபடித்துக் காட்டுங்கள்.

உங்களுடைய சொந்த செயல் முறை வரிசை விளையாட்டை உருவாக்க படங்களை பயன்படுத்தலாம். அந்தப் படங்களின் பிரதியை எடுத்து, பின்னர் அதை வெட்டி எடுத்து, அவற்றை வரிசைப்படி வைக்க உங்களுடைய குழந்தைக்கு பயிற்சி கொடுங்கள். அந்த படங்களை இரண்டு பிரதியாக எடுத்து, ஒரு தொகுதியை வரிசைப்படி அட்டையில் ஒட்டிவிடவும்,அதை பயன்படுத்தி, மற்றொரு பகுதியை உங்களுடைய குழந்தையை சரியாக வரிசைப்படுத்த வையுங்கள்.

***'ஷூ நாடாவைக் கட்டும்' செயல் முறை வரிசை இங்கே கொடுக்கப்பட்டுள்ளது:***

1. நாடாக்களின் இரு முனைகளை பிடித்துக் கொள்ளவும்.
2. நாடாக்களை இழுக்கவும்.
3. நாடாக்களின் இருமுனைகளையும் அந்தந்த பக்கத்தில் தொங்கவிடவும்.
4. அந்த அந்த பக்கத்தின் கையைக் கொண்டு நாடாவை எடுக்கவும்.
5. ஷூவுக்கு மேலே நாடாக்களைத் தூக்கவும்.
6. வலது நாடாவை இடதுக்கு மேலாக, குறுக்காக முக்கோணம் போல் அமைக்கவும்.
7. இடது நாடாவை உங்களை நோக்கி கொண்டுவாருங்கள்.
8. முக்கோணத்தினூடே இடது நாடாவை இழுக்கவும்.
9. நாடாக்களை எதிர் எதிராக இழுக்கவும்.
10. இடது நாடாவை மடித்து, சுருக்குப் போடவும்.
11. இடது கையால் சுருக்கை பிடித்துக் கொள்ளவும்.
12. அந்த சுருக்கை சுற்றி, விரல்களுக்கு மேலே, வலது நாடாவைக் கொண்டு வரவும்.
13. வலது நாடாவை ஓட்டையின் வழியாக தள்ளவும்.
14. இரண்டு சுருக்குகளையும் இழுக்கவும்.